22.01.2026 OS.No.47/2015 DW2 Name :.ராஜா

குறுக்கு விசாரணை

1. பூங்காவனம், குப்பம்மாள், ஆகியோர்களுக்கு எவ்வளவு சொத்து பாத்தியபட்டது என்பது எனக்கு தெரியும். சுமார் 2 1/4 ஏக்கர் அவர்கள் பெயரில் உள்ளது. இருவர் பெயரிலும் அந்த சொத்து ஒரே பத்திரமாக இல்லை. அந்த சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. எந்த வகையான ஆவணத்தின் மூலமாக அந்த சொாத்து அவர்களுக்கு பாத்தியபட்டது என்பது எனக்கு தெரியாது. எந்த வருடத்திய ஆவணத்தின் மூலம் அந்த சொத்து அவர்களுக்கு பாத்தியபட்டது என்பது எனக்கு தெரியாது.
2. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சம்மன் எதுவும் வரவில்லை. ராதாம்மாள் கேட்டுகொண்டதன் அடிப்படையில் தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். எனக்கு தமிழ் படிக்க தெரியும். முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் உள்ள விவரங்கள் ராதாம்மாள் சொல்லி தயார் செய்து வைத்திருந்த ஆவணத்தில் நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை. நான் சாட்சி சொல்ல வந்துள்ள வழக்கில் இருக்கும் சொத்தில் என்ன சர்வே எண் குறிப்பிட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எத்தனை அயிட்டங்களாக சொத்துகள் குறிப்பிடபட்டுள்ளது என்பது தெரியும்.
3. 3 அயிட்டங்களாக சொத்துகள் காட்டபட்டுள்ளது. அந்த மூன்று அயிட்ட சொத்துகளின் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. அவற்றின்

செக்குபந்தி தெரியும். ஒரு அயிட்ட சொத்தின் செக்குபந்தி தேவமங்களத்திற்கு வடக்கு, சீவிபட்டறைக்கு தெற்கு, ஐவே ரோட்டிற்கு கிழக்கு, நாயக்கர் நிலத்திற்கு மேற்கு ஆகும். மூன்று சொத்திற்கு அதே செக்குபந்தி அளவு தான். அந்த சொத்து சம்மந்தமாக தான் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். அந்த செக்குபந்தி அளவுகள் தொடர்பாக என்னிடம் ஆதாரம் எதுவும் காட்டபடவில்லை. அந்த சொத்து தொடர்பான ஆவணங்களை நான் பார்த்துள்ளேன்.

4. பாலகிருஷ்ணன் பெயரில் உள்ள பட்டாவை பார்த்துள்ளேன். வேறு ஆவணங்கள் எதுவும் பார்க்கவில்லை. 2014ல் நான் கையெழுத்து செய்த ஆவணம் எண் எனக்கு தெரியாது. எந்த சர்வே எண் தொடர்பாக அந்த ஆவணம் எழுதபட்டது என்பது எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தில் உள்ள நிபந்தனைகள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ரீட்டா, பாத்திமா பெயரில் உள்ள ஆவணங்களை நான் பார்த்துள்ளேன்.
5. இன்றிலிருந்து சுமார் 2 ஆண்டுகளுக்கு முன் அவற்றை பார்த்துள்ளேன். அதை சார்லஸ் என்பவர் என்னிடம் காட்டினார். அந்த ஆவணத்தை காட்டி தேவைபடும்போது நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வரவேண்டும் என அவர் கூறினார். 1987 ஆண்டு பத்திரத்தின் எண், சொத்தின் சர்வே எண் ஆகியவை எனக்கு தெரியாது. எதன் அடிப்படையில் 2014 ஆண்டு ஆவணம் எழுதபட்டது என்றால் பாலகிருஷ்ணனுக்கு உடல்நிலை சரியில்லாததால் அவர் நிலத்தை கொடுத்துவிட்டார்.
6. கபீல் மருத்துவமனையில் தான் பாலகிருஷ்ணன் உடல்நிலை சரியில்லாமல் படுத்தபடுக்கையாக அனுமதிக்கபட்டிருந்தார்.

மருத்துவமனையில் சிகிச்சை பலனலிக்காமல் அவர் இறந்துவிட்டார். மருத்துவமனையில் அனுமதிக்கபட்டு அவர் இறந்துள்ள இடைப்பட்ட காலத்தில் தான் 2014 ஆண்டு ஆவணம் எழுதபட்டதாக கூறுகிறார்கள். அந்த விவரம் எனக்கு நேரிடையாக தெரியும். பாலகிருஷ்ணனை நானும் கபீல் மருத்துவனையில் சென்று பார்த்துள்ளேன். 2014 ஆண்டு ஆவணத்திற்கு முன் கிரைய ஒப்பந்தம் போடபட்டது. அதுபற்றிய விவரம் எனக்கு தெரியும்.

7. 2014 ஆண்டு ஆவணம் ஏற்பட்ட சுமார் 2,3 மாதங்களுக்கு முன் கிரைய ஒப்பந்தம் போடபட்டது. அதில் நான் எந்த கையெழுத்து போடவில்லை. அதில் முன்பணம் வாங்கிய விவரம் பற்றி எனக்கு தெரியாது. 2014 ஆண்டு ஆவணம் தொடர்பாக நடந்த பணபரிவர்த்தனை பற்றி எனக்கு தெரியாது. ராதாம்மாள் மகன் பாலகிருஷ்ணனின் மருத்துவ செலவுகளை கட்டியுள்ளார் என்றால் சார்லஸ்யிடம் வாங்கிதான் அதை கட்டியுள்ளார்.

8. ரூ.50,000 அவ்வாறு கொடுத்தது பற்றி சார்லஸ் என்னிடம் சொல்லியுள்ளார். அதை தவிர வேறு விவரம் எனக்கு தெரியாது. தற்போது நீதிமன்றத்திற்கு என்னுடன் ரீட்டா வந்துள்ளார். பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 22/01/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.01.22 16:49:11 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.